# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2041/25 - 2017 ඔක්තෝබර් මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.10.19

*2041/25 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு ஹெம்மாதகம நீர் வழங்கல் கருத்திட்டத்தின் நீர் சேகரிப்புத்தொட்டியை மற்றும் உட்செல்லும் பாதையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2017, ஒற்றோபர் 10*
*5/2/1/1287.*

***அட்டவணை***

*கேகாலை மாவட்டத்தில், அரணாயக பிரதேச செயலாளர் பிரிவில், தல்கஸ்பிடிய முஸ்லிம் கிராம பிரிவு (44 C) கிராம அலுவலர் பிரிவில், தல்கஸ்பிடிய பணாபுரே கிராமத்தில் அமைந்துள்ள அபதெனிய தோட்டத்தில் பணாபுரே பகுதி என்றழைக்கப்படும் காணியில் இருந்து நில வரைபடத்தின் இலக்கம் : 281 இல் துண்டு இலக்கம் 35, 36 மற்றும் 37 ஆகியவற்றின் அண்ணளவாக 46 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *குறித்த நில வரைபடத்தின் துண்டு இலக்கம் : 13 உட்பிரவேச வழி ;* |
| *கிழக்கு* | : | *குறித்த நில வரைபடத்தின் துண்டு இலக்கம் : 38 ;* |
| *தெற்கு* | : | *ஊர்மக்கள் உரிமைகோருகின்ற காணி மற்றும் துண்டு இலக்கம் : 34* |
| *மேற்கு* | : | *துண்டு இலக்கம் 33, 34 மற்றும் துண்டு இலக்கம் : 13, வீதி.* |

*காணிக்கு உரிமைகோருபவர்களின் பெயர் மற்றும் முகவரி :*

*1. எம். எச். ஆயிசா செய்லானியா,*
*இல. 225,*
*காஸல் வீதி,*
*பொரள்ளை,*
*கொழும்பு - 08.*

*11- 222*


1A - G 26445 — 29 (2017/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தம்

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் : 2033/47 மற்றும் 2017.08.23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 92 ஆவது பிரிவின் கீழான கட்டளை உப அட்டவணையில் துண்டு இலக்கம் : 01 மற்றும் 02 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாயினும், அது துண்டு இலக்கம் : 01 மற்றும் 03 என திருத்தியமைக்கப்பட வேண்டுமென இத்தால் அறியத்தருகின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*இல. 35, "லக்திய மெதுர", புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2017, ஒற்றோபர் 16*
*5/2/1/1270.*

*11- 239*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.